உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருநீற்றுப் பெருமை.

இஃது

திருநள்ளாறு

பிறவாநெறிகாட்டும் வம்லைரும்

தமிழ்ப்பண்டிதருமாகிய

ஸ்ரீலஸ்ரீ சு. நடேசதேசிகரவர்களால்

வெளியிடப்பட்டது.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

விலை அணா 2.

023:415
N09
118849

உ

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

உலகில் வழங்குஞ் சமயங்கள் பல அவற்றுள் புண்ணிய பூமியெனப் பல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட நம் இந்துதேசத்தில் வழங்கும். வேதாகமங்களையே முக்கிய பிரமாணமாய்க் கொண்டுள்ள சைவசமயமே இந்நாட் கேற்புடைத்தாயது. இச் சமயத்திற்கு வேண்டப்படுவனவாகிய சாதனங்கள் திருநீறு உருத்திராக்கம் முதலியவைகளேயாம்.

அவற்றுள் அத்திருநீற்றின் பெருமையை வடமொழியில் பஸ்ம ஜாபாலோப நிடதமுதலியவற்றுள்ளும் தென்மொழியில் ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் திருநீற்றுப்பதிகம் உபதேசகாண்டம் முதலிய சைவநூல் பலவற்றுள்ளும் ஆங்காங்கு பலவிடங்களிற் கூறியிருப்பவை யனைத்தும் ஒருங்குசேர்த்து யாவரும் எளிதிலுணருமாறு ஒரு நூல் தொகுத்துத் திருநீற்றுப் பெருமையெனப் பெயர் நிறீஇ வெளியிடத் துணிந்தேன். அற்பவறிவையுடைய யான் தொகுத்ததில் உளதாங்குற்றம் நீக்கிக் குணமாய்க் கொள்ளற்குக் கற்றோரின் நற்றாடொழுது வேண்டுகின்றேன்.

சுபம்.

இங்ஙனம்:

22-2-09.
திருநள்ளாறு } சு. நடேசதேசிகன்.

371
1907
22-10-1979

7- JUN 1909

உ

# சிறப்புப்பாயிரம்.

புதுவைக் கவர்ன்மெண்ட் காலேஜ்
தமிழ்ப் பண்டிதர்
மா-௱-ஸ்ரீ
சி. பங்காருபத்தரவர்கள் இயற்றிய

## ஆசிரியப்பா.

சீர்பெறு மறைகளுஞ் செப்புதற் கரிதாய்ப்
பவமகன் றிட்டுச் சிவமா வதற்கோர்
சிவசா தனமாய்ச் சிறந்து விளங்கும்
புனிதவெண் ணீற்றி னனிபெரு மையினைப்
புகல்பல நூல்களிற் பொதிந்து கிடக்கு
மருஞ்செயுட் பிரமா ணங்களைக் கொண்டி
யாவரு மறிய வெடுத்து விளக்கிப்
போற்றிடு மொருதிரு நீற்றுப் பெருமையென்
றொருநூற் றிரட்டி யுலகினுக் களித்தான்
அவன்று னியாரெனி னறைகுவல் கேண்மோ
அருமைப் புயங்கப் பெருமான் கோத்திரன்
மானிலந் தனிற்பிற வாநெறி காட்டுந்
திகழ் வமிசத்திற் புகழொடு தோன்றிப்
பேணுஞ் சமயநிர் வாணதீக் கையொடு
சொல்லுமா சாரிய நல்லபி டேகமுஞ்
செய்யப் பெற்ற சிவபூசை யினை

வழுவின்றி நடத்து மாண்புடை யவனுஞ்
சுந்தர தேசிகன் றுணைவியா நல்ல
மாட்சிமை சேர்மீ னாக்ஷியம் மையொடு
புரிதவத் துதித்த வரியசற் புத்திரன்
அடக்க முதலிய வருங்குண நிறைந்தோன்
அணியுநல் லக்க மணியரு மிடற்றான்
விழுத்தகு நீறு பழுத்த நெற்றியன்
தேவ வாரத் திருப்பதி கங்களை
நாளு வார நாளுமோ திட்டுப்
பவநெறி கடந்த சிவபரஞ் சுடரின்
செவிவிருந் தருந்தச் செயுந் தவமுடையான்
தொல்வினை யகற்றுங் கல்வி கற்றோன்
நேசமார் நடேச தேசிக னென்னு
நற்பெயர் படைத்த பொற்புடை யோனே.

7 - JUN 1909
MADRAS.

உ

சிவமயம்.

# திருநீற்றுப் பெருமை.

விபூதி வசனம்॥

அத வக்ஷ்யே விசேஷேண த்ரிபுண்ட்ரஸ்ய ஸ்நானதாரணம்|
தர்சனம் ஸ்மரணஞ்சைவ ஸ்நானஞ்ச த்ரியாஸமேவச|
ப்ரஹ்மவிஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச த்ரிதைவதம் ப்ரகாசனம்|
ஸ்ருஷ்டி ஸ்திதிஞ்ச ஸம்ஹாரம் பாபஸம்ஹார காரகம்|
ஸர்வதோஷ விநாசாய ஸ்நானமேவ விசேஷதஃ|
ஸர்வகாமேஷு ஸம்ப்ரீத ஸர்வஸ்நாநாத் த்ரிவர்க்ககம்|
யக்ஷராக்ஷஸ பைசாச பூதப்ரேத காலநாசனம்|
ஸ்ரீகரம் விஜயம் புண்யம் ஸர்வதோஷ விநாசனம்|

---

## திருஞானசம்பந்த சுவாமிகள்

## தேவாரம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்திர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர்வா யுமைபங்கன் திருவால வாயான் திருநீறே. (க)

வேதத்தி லுள்ளது நீறு வெந்துய ர்தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
வோதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. (உ)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே. (௩.)

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவாலவாயான் திருநீறே. (௪)

பூசவினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேசவினியது நீறு பெருந் தவத்தோர்களுக்கெல்லா
மாசை கெடுப்பது நீறு வந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே. (௫)

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. (௬)

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
வயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே (௭)

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
வராவணங்குந் திருமேனி யாலவாயான் திருநீறே. (௮)

மாலொ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
வேலவுடம் பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
வாலமுதுண்ட மிடற்றெம் மாலவாயான் திருநீறே. (௯)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருதவினியது நீறு
வெண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
வண்டத்தவர் பணிந் தேதது மாலவாயான் திருநீறே. (க)

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி
மந்தரத் தமரர் பெம்மா ஞனல் வெள் ளூர்தியான் றன்
மந்திர நமச்சிவாய மாகநீ றணியப்பெற்றால்
வெந்தறும் வினையுநோயும் வெவ்வழல் விறகிட் டன்றே. (கக)

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்டபோதுகந் தடிமைத்
திறம்நினைந் தங்கு வந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட் டாதொழிந் தீசன்றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகத்தானும்,

"சாம்பலைப் பூசிச் சலமின்றித் தொண்டுபட்
டுய்மின்களே"

எனத் திரு விருத்தத்தானுந் தெள்ளிதிற் புலப்படும்.

## திருமந்திரம்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. (உ)

## உபதேசகாண்டம்.

யாது பாதகம் புரிந்தனராயினு மிகழும்
பாதகங்களிற் பஞ்சமா பாதக ரெனினும்
பூதி போற்றிடிற் செல்வரா யுலகெலாம் போற்றத்
தீது தீர்ந்தனர் பவித்திர ராகியே திகழ்வார். (க)

திருவெண் ணீற்றினை வான்முறை செங்கையி னேந்தி
யுருகு மன்பினிற் புனைந்தெளித் தொருமையிற் குழைத்து
மருவு புண்டரமாயினும் வண்டுகளெனினும்
பெருகு காதலிற் புனைந்துளோர் கயிலை பெற்றுடையோர். (உ)

பூதி பூசினும் பூதியின் றன்மை கேட்டிடினும்
யாது பாதக மியற்றினும் பாதவ மெனினும்
தீதுறுந் துயர் தொலைவன வாதலிற் சிறந்த
வாதி நீற்றின தண்மையை யாவர்பெற் றறிவார். (௩)

சூதசங்கிதை.

மாலய னிந்திரன் மற்றை யமரர்
மலர்மகளிர் சசி மற்றை வானக்
கோலமட வரியக்கர் கந்திருவ ராக்கர்
குல வசுரர் வேதச்
சிலமுனிவரர் மற்றே ரிவருளருந்
தவமுடையீர் திரு வெண்ணீறு
சாலவு முத்தூளன முப்புண்டர நாடொறும்
போற்றித் திரவார் யாரே. (க)

திருவாதவூரர் புராணம்.

உருப்பு பொலாதவர் நல்லொழுக்கமு
மில்லவ ரென்று நம்மளவில்
விரும்பிலாதவ ரெனினும் மெய்ந்நீறு மிக்க
சாதன வேடமுங் கண்டாற்
றிரிப்பிலாது சென் றெதிருற வணங்கித்
தக்கபோனக மளித் தவர்க் கெளிதா
விருப்பார்தா மவரடியவர்க் கடியரென்பர்
யானென தெனுஞ் செருக் கறுப்பார். (க)

எனத் திருவாதவூரர் புராணமுதலிய நூல்களாலுந் திருநீற்றின் பெருமை இத்தகையதென அளவிடற்கு வரம்பிலவாயின.

பாய கடல் சூழ்ந்த இவ்வுலகின்கண் அநாதியா யுள்ள கடவுள், ஆன்மகோடிக ளுய்யு நிமித்தஞ் சகளீகரித்துத் தமது திருவருட்குண மாகிய சத்தியைத் தோற்றுவித்துச் சிருட்டி, திதி, சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்ற இவ்வைந்து கிருத்தியங்களையும் முறையே இயற்றி வருவாயென் றநுக்கிரகிக்க, சர்வலோக மாதா வாகிய உமாதேவியார் முறையே ஐந்தொழில்களு மியற்றுதற்கு இன்னறிகுறி வேண்டுமென்று பிரார்த்திக்க, பரமகருணாநிதியாகிய முழுமுதற் கடவுள், க்ஷீரசமுத்திரத்தில் தமது திருவருட்குணத்தில் சிறிதைப்பசுக்களாய்த் தோன்றும்படி திருவுளங்கொள்ள, அக்ஷீரசமுத்திரத்தில், நந்தை, சுரபி, சுமனை, சுசீலை, பத்திரை யென ஐந்துபசுக்களாய்த் தோன்றிச் சிவலோகத்தடைந்து அங்குச் சிவபெருமானேறும் இடபத்தோடு முயங்கியிருந்த பின்னர், சிவபிரான், அப்பசுக்களின் கோமயத்தை ஆகம விதிப்படி, விளைத்து அத்திருநீற்றைத் தானணிந்து, முத்திப்பேற்றுக்கு இப்பூதியே துணையாமென்று, எம்பிராட்டியாகிய உமாதேவியாருக்களிக்க, உமாதேவியார் மற்றேனையோர்க்கு மளித்தனள்.

கடம்பவனபுராணம்.

ஆதிசா லந்தக் கோமயத்தை யெடுத்து
சிவன் றொல்லாகம நூல்
விதியால் விளைத் தக்கீறன்னி யினிதன்
திருநெற்றியிற் றரித்துக்
கதியார் பூதி யிதுவே காப்பென்று விமலை
னைக் கொடுத்தான்
மதியார் நுதலாட னளிக் கைந்தொழின்மேலோ
ரெவர்க்கும் வழங்கினளால். (௧)

சைவசமயத்தை அநுபாலனஞ் செய்தற்பொருட்டுச் சிவாஞ்ஞை யின்படி அப்பசுக்கள் இப்பூமியின்கண், வந்துள்ளன. அப்பசுக்களின் சிரசில், சிவபெருமானும், வலதுபாகத்தில் விட்டுணுவும், இடதுபாகத்தில் பிரமனும், நாவினுனியில் சர்வதீர்த்தமும், நெற்றியில் கணபதியும் கந்தசுவாமியும், செவிகளில் மருத்துவர்களும், கண்களில் சோமசூரியர்களும், நாவில் வருணனும் சரஸ்வதியும், கண்டத்தில் இந்திரனும், முதுகில் உருத்திரர்களும், உரோமங்களில் முனிவர்களும், காருகபத்திய முதலிய அக்கினி மூன்று முறையே. உதரம் இருதயம் முகம் என்னும் மூன்றுறுப்புக்களிலு மிருப்பதாய்ச் சிவாகமங்கள் செப்புகின்றன. இன்

னும் இவ்விதமே வனைய. அவயவங்களில் மற்றைத்தேவர்கள் வசிப்பதாய்க் கூறியிருப்பினும் அதனை இங்கு விரித்திலம். மேற்கூறிய ஐவகைப்பசுக்களில், நந்தை கபிலநிறமும், சுரபிவெண்ணிறமும், சுமனை செந்நிறமும், சுசீலைபுகைநிறமும், பத்திரை கருநிறமுங்கொண்டுள்ளன. பிராமணர்கட்கு நந்தையும் கபிலையும், க்ஷத்திரியர்கட்குச் சுமனையும் வைசியர்கட்குச் சுசீலையும். சூத்திரர்கட்குப் பத்திரையும் உரியவையென்பது பின்வரும் பிரமாணச்செய்யுளாற் றெள்ளிதிற் புலப்படும்,

## கடம்பவன புராணம்.

தாவில் கபிலநிற நந்தை தவளஞ் சுரபி மறையோர்க்கா
மேவு சுமனை நிறஞ் சிவப்பு விறல் சேரரசர் தமக் குரித்தா
மேவ மகனுஞ் சுசீலை நிற மிசைதூம்பிரஞ் சொல் வசியருக்காம்
பூவினுயர் பத்திரை கருமை பொங்கு நிறஞ் சூத்திரர்க்காகும். ()

அப்பசுக்களின் கோமயம், சாந்திகம், பவுட்டிகம், காமதமெனமூத்திறப்படும் அவற்றுள் அப்பசுக்களின் கோமயத்தைப் பூமியில் விழாது பிரமமந்திரத்தா லேற்றுவிளைத்தல் சாந்திகம். பூமியின் வீழ்ந்த மயத்தை சடங்கமந்திரத்தால் விளைத்தல் பவுட்டிகம். பிராசாத மந்திரத்தால் விளைத்தல் காமதம் எனப்படும்.

திருநீற்றிற் குரிமையில்லாத பசுக்கள். ஈனப்பெறாத கன்னிப்பசு, சினைப் பசு, மலட்டுப் பசு, நோயுள்ள பசு, கன்றீன்று பதினைந்து நாட்களுக்கு மேற்படாத பசு, இறந்தகன்றையுடைய பசு, குருட்டுப்பசு முதலியனவாம். இது பின்வரும் பிரமாணநூற்களாலும் புலப்படும்.

## பேரூர்ப்புராணம்.

கன்று பயவாத களி நாகு புனிற்றுக்கோ
கன்றிறுதி யுற்ற கபிலைக்குல மலட்டான்
கன்று துணையின்ற கறவைத் திரள் முதிர்ந்த
கன்றுறு பசுக் கருவயிற்று வளர் பெற்றம். (௧)

வார்ந்த செவி கோடு நெடுவா லினைவக டம்பிற்
றீர்ந்த சுரபித் தொகுதி தினவளர் பல்வி
யார்ந்து வருகாலி பிணியான் முதுடஞ் சுட்டென்
றோர்ந்த வினை நீங்க வெழி லோங்கி வளர் தற்றுன். (௨)

## கடம்பவனபுராணம்.

ஈன் பெருக் கன்னி கொடுவைமூப் பிலக்கணமின்மை
வான் கிளைப்பா வால்செவி கொம் பறை வர்த்தி
யான் மலங்களைப் புசிக்குமாநோய்ப் பசு வின்று
பான்மைசேர் பதினைந்து நாளுட்படும் பாக்கள். (௧)

இறந்த கன்றுடைத் தாய் முடங் குருடிருஞ் செவிடு
மறைந்ததிங் கெனத் தகைய விரெண் குறையகற்றி
நிறைந்த நற்குண மழகுமுன் னிகழ்த்திய நிறத்தான்
சிறந்த பங்குனிச் சாலித் தாண் மேய்ந் தவை சிறப்பாம் (௨)

## திருநீற்றைச்செய்யுமுறை.

நியதி முடித்துக் கொண்டு, பசுதங்கியிருக்கும்இடத்தைச் சார்ந்து கோசாவித்திரி யென்னும் மந்திரத்தினால் சந்தனாதி மலர்களோடு அர்ச்சித்து அறியாமை யகற்றுந் தூபமும் அறிவை விளக்குந் தீபமும் கொடுத்து வணங்கியபின் அட்டமி சதுர்த்தசி கிரகண புண்ணிய காலமாகிய இந்தத் தினங்களில் பசுவின்கோமயம் பூமியில்விழாது. தாமரையிலை வெற்றிலை பலாசிலையாகிய இவ்விலைக ளொன்றில் சத்தியோ சாதமந்திரத்தினாலேற்று இயற்றவேண்டும் இதற்குப் பிரமாணம்.

## கடம்பவனபுராணம்.

சாலு மிருவா வட்டமி சதுர்த்தசி கிரண
கால மின்னதில் விட்ட கோமயத்தைக் கனைத்தி
னாலும் பூமியில் விழாது முன்னம்புய விலையா
லேலும் வாழை மெல்லிலை நறும் பலாசிலை யிலேற்றல்.

## பேரூர்ப்புராணம்.

பங்குனியி னெல்லரி பணைக்க ளுறு தாண் மேய்ந்
தங்கவை விடுத்த மய மட்டமியி ரேழிற்
றங்கு பதினைந்தின் வளர் சாதல் மநுவோதி
மண்டனில் விழாமுன் மரை மெல்லிலையி னேற்று.

அக்கோமயத்திற் பஞ்சகௌவியம் பெய்து, அகோரமந்திரத்தினாற் பிசைந்து தற்புருட மந்திரத்தினாற் உருட்டி நெற்பதரோ டமைத்து

முன்மொழிந்த அகோர மந்திரத்தினு லெடுக்கவேண்டுமென்பது பின்வரும் பிரமாண நூற்களாற் காணப்படும்.

### பேரூர்ப்புராணம்.

வாழும் பொருவில் வாமமது வோதி வளர் கவ்வியம்
பொழிந் ததி லகோர மதா லோற்றப் பிசைந்து
செழும் புருடம் விண்டு திரள்செய்து திகழோமத்
தெழுந்தழன் மடுத்தபி னெடுத்திட லீசானம். (க)

### கடம்பவனபுராணம்.

ஓதும் யோனியிற் படாது மேலாக வொண் சத்யோ
சாத மந்திரத் தேற்று மேல் வழும்பினைத் தள்ளி
யாதிவாமத்திற் கவ்வியம் பெய் தகோரத்தாற்
போத நன்குறப் பிசைந்து தற்புருடத்தி லுருட்டி. (க)

பின்னும் வெய்ய வோமத்தினிற் பதடிபோ டமைத்து
முன்னுரைத்திடு மகோரத்தால் விளைவித்து மொழிந்த
விங்கிலங் தொழும் பாகன் கன்னீசானத் தெடுத்து
மன்னலந் தரும் புதிய தூயவாடையின் வடித்து. (உ)

திருநீற்றை பராசத்தியின் திருவுருவமே யெனத் தியானித்து "வியோம வியாபி" என்ற முதற்குறிப்பினையுடைய மந்திரத்தைச் செபித்து நறுமணமூட்டி அவகுண்டனஞ் சேனு முத்திரைக்கொடுத்துச் சிவ பஞ்சாக்கரத்தை உச்சரித்து சங்கு, பொன், வெள்ளி, தாமிரம், மண், சுரை, பித்தளை ஆகிய இவைகளாற்செய்த பாத்திரத்தில்வைத்துத் தரிப்பது; பிற்கூறும் கற்பம் அநுகற்பம் உபகற்பம் எனும் மூன்றனுள் கற்பமென்று சொல்லப்படும். இதற்குப் பிரமாணம்.

### கடம்பவனபுராணம்.

சங்கு பொன் வெள்ளி தாமிர பாத்திர படையிற்
றுங்க வுத்தம மத்திம மதமுஞ் சொல்லு
மிங் கென்றிடு மண் சுரை பித்தளை யிவையும்
பங்க மில்லதாம் விளங்கு மப்பாத்திரத் தமைத்து. (க)

வண்ண வெண் பொடி யிறையுரு வென மனத் தென்னி
நண் ணரும்பஞ்சப் பிரம சீர்ச்சடங்கரு நயந்தே
யெண்ணுதற் கரும் வியோமவியாபி யென் றிசைக்கு
மன்னான் மந்திர மிவற்றினாகம விதிசெபித்து. (௨)

நறிய சண்பகங் கேதகை பலாசம் புன்னாகரு
சிறிய சண்பகந் தாமரை துளவு பாதிரிப்பூ
வெறி கருப்புரம் வெட்டிவேர் மரு விலாமிச்சுக்
குறிகொள் மல்லிகை தக்கோலங் கொழுந்து தாயுருவி. (௩)

தருப்பையி னுனி யாகமஞ் சாற்று மற் றெவையுந்
தெரிப்பருஞ் சத்யோசாத மீசானமுஞ் செபித்து
மருப் பயின்ற வெண் பூதியுண் மணங்கொளச் செறிந்து
விருப்பமுற்று வெண் ணீற்றின் காயத்திரி விளம்பி. (௪)

சுத்தமாகிய நிலத்தில் வைத்தணிமலர் சூட்டிப்
புத்தி யிதெனவண் டுகில் வாயினிற் பொதிந்து
பத்திசேர் கலசத்தவ குண்டனம் பண்ணி
யுத்திரந் தெறித்துத் தேனு முத்திரை யடைவாய். (௫)

மூலத்தாற் கொடுத்திடு வரம்முழுவெண்ணீ றெடுக்கி
னேலத்தாஞ் சிவமந்திர மூச்சரித் தெடுப்பர்
ஞாலத்தார் தொழும் பெரியர் முற்கற்ப நாகவின் றேனுஞ்
சீலத்தார் பஞ்ச வில்வத்தால் விளைத்தலுஞ் செப்பும். (௬)

வனத்தில் உலர்ந்துள்ள கோமயத்தைக் கொண்டுவந்து தூளாகச் செய்து கோசலம்பெய்து முற்கூறிய விதிப்படி விளைத்துக் கொள்வது அநுகற்பகம். இதற்குப் பிரமாணச்செய்யுள்,

### பேரூர்ப்புராணம்

கனத்திற் கரிய பூங் குழலாய் கற்பமுறைத்தா மனுகற்பம்
வனத்தி லுணங்கு மயமேடமதியிற் கொணர்ந்து பொடித்ததன்க
ணினத்திற்சிறந்த கோசலம் வார்த்தெடுத்து நவின்ற முறையானே
யனற்றி விளைத்துக் கொளலாகு மறைத முபகற்பமுங் கேளாய்.

வனத்தில் இயல்பாற்றீப்பற்றி நீர்த்துள்ளபொடியைப் பஞ்சகவ்யம் பெய்து முற்கூறிய விதிப்படி விளைத்துக்கொள்வது உபகற்பமாம். இதற்குப்பிரமாணம் வேண்டும்வரையிலெடுத்துக்கொள்ளப்பட்ட செய்யுள்.

## பேரூர்ப்புராணம்.

வளர்தீ யியல்பிற் கவர்ந் துண்ட
வனத்துப் பொடியிலானைந்துந்
தளரா தொழுக்கி யொழிந்த படி
தழல் வைத்தெடுத்துக் கொளலாகும்.

இஃதன்றி, கற்பம் அநுகற்பம் உபகற்பம் அகற்பம் என நான்காகப்பிரித்துள்ளன வென்பது பின்வரும் பிரமாணச்செய்யுட்களால் நன்குணரப்படும்.

## கடம்பவனபுராணம்.

கற்ப மித்திற முத்தம மிருத்தலுங் கருதி
யுற்பனத்தொடன் றெடுத்த கோமயத்தை யன் றுருட்டி
யற்பினுக்கினுஞ் சென்று வேறுணக்கியே யடினு
நிற்ப தப்பெய ரனுகற்ப நிகழ்த்துதுங் கேண்மின். (க)

இணங்கு சித்திரைத் திங்களிற் செறிவனத் தெய்தி
யுணங்கு நன்மயங் கொணர்ந் திடித் துரியகவ்யம் பெய்
துணங்கொர் பாகுனன் றறைந்த முன் மனுப்படி விளைப்பார்
கணங் கொள் மாதவத்தி ருபகற்பத்தைக் கழறில். (உ)

இலங்கு நீள்வனத் துணங்கிய மயங் கொணர்ந்திடித்து
நலங்கொள் கோசல மொன்றுமே பெய்து முன் னவின்ற
வலங்கொ ளாகம விதிப்படி மனுமொழிந் தடைவின்
பலங்கொளப் பிசைந் துருட்டி வைத்தெடுப்பர் பாங் கறிந்தோர்

அகற்ப மாவன வனத்திற் றூபாக்கினி யதனால்
விகற்ப மின்றியே யியற்கையின் வெந்த வெண் பொடியை
யுகப்பவே கொணர்ந் தானைந்தும் பெய்து முன்னுரைத்த
வகைப்படுந் திறன் மந்திரத் துருட்டி வைத் தெடுப்பார். (ச)

கோமயத்தாலாக்கும் வெண்ணீறே மிக்க மேம்பாடுடைத் தென்பதற்குப் பிரமாணம்.

023:415
N09



### கடம்பவனபுராணம்.

நீற்றின் மிக்கது கோமயத்தாக்கு வெண்ணீறே
யேற்ற மாயின தாதலிற் காரண மிவைசத்தே
மாற்றல் சான்றிடு முனிவிர்கா ளாதியோ டந்தக்
தோற்ற மீறிரண்டிற்குங் காரணந் தொகுபூதி. (க)

பிராம்மணாதி ஒவ்வொரு வருணத்தாருக்கு முரிய திருநீறித்த கைய தென்பதற்குப் பிரமாணம்.

### கடம்பவனபுராணம்.

வேத ராதிய மூவர்க்கும் விமல னாலயத்து
யோது சூத்திரர்க் குயர் மடப் பள்ளியி னகத்து
மேதந் தீர் குறை யேனையர்க் கடவித் தீயிடத்தும்
போத வாக்கிய நீ றுரித்தாமெனப் புகலும். (க)

### திருத்தணிகைப்புராணம்.

அரு டகு தீக்கை புரிந்தெழுத்
தைந்து மளித்தருந் தமிழ்முனி சொல்வா
னிருளறு மினையபூதி தீக்கையி னெய்தாத
சூத்திரர்க் கவர்க் கிழிந்தோர்க்
கொருவுவ விறைவன் றிருமடைப் பள்ளி
யொண்பொடி சூத்திரர்க் குரித்தாங்
குரையமுன் மேய்ந்த வனத்து வெண்ணீறு
கோடலாந் தாழ்ந்துளோ ரெவர்க்கும். (க)

118549

திரு நீற்றில் நீல நிறமுடைய திருநீற்றைத் தரித்தால் வம்பிலாக் கொடிய பிணியையும் வெண்ணிறமுடைய நீற்றைத் தரித்தால் வம்பிலாப் புண்ணியத்தையு மளிக்கு மென்பதற்குப் பிரமாணம்.

### கடம்பவனபுராணம்.

பரவு நீலத் திப்பிணி சிவப்பினை யின்மைபகர் தாம்
பிர நிறத்தவா யுகந்தோறும் பிணிநல்குரவா
நிரவு மித்திர நிறம் படா தெடுத்திடினீற்றி
னுரவு வெண்ணிற மெண்ணிலாப் புண்ணியு முதவும். (க)

# திருநீற்றுப் பெருமை.

## பேரூர்ப்புராணம்.

அளவாப் பிணியைத்தரு நில மாயுணிக்குந் தாமிரஞ் சீர்
பிளவா விசையைத்தபுஞ் செம்மை பீத மளிக்கு நல்குரவே. (க)

வெண்மை யளவில் புண்ணியத்தை விளைக்கு
மதனா லது தரிக்கும் வன்மை யுடையது. (உ)

இத்தகைய விபூதியானது வைதிக மென்றும் லௌகீகமென்றும் இருவகைப்படும். அவற்றுள் வைதிக விபூதி ஓமகுண்டத்தி லெடுக்கப்படுவது லௌகீகவிபூதி கோமயத்தாலாக்கப்படுவது. இன்னும் வைதிக விபூதி புராதனியென்றும், சத்யோசாதையென்றும். இருதிறப்படும் பிரமாவின் ஓமகுண்டத்திற் பூப்பது புராதனி. அந்தணரோம் புமங்கியிற் படுவது சத்யோசாதை இனி லௌகிக விபூதியும். சைவம் அசைவம் என இருதிறப்படும். சிவதீட்சையுடையார் தரித்தற்குரியது சைவவிபூதி அஃதில்லாதார்தரித்தற் கேற்றது அசைவவிபூதி. இன்னும் சைவ விபூதி கற்பம் அநுகற்பம் உபகற்பம் என முத்திறப்படுமென்பதைப் பிரமாணச் செய்யுள் மூலமாய் முன்னெடுத்துக்காட்டியிருப்பினும் இங்குத் தொடர்ப்புபற்றிச் சுருக்கிக்காட்டுதும் (அதாவது) சுத்தமான பசுவின்கோமயத்தை யெடுத்து விதிப்படி சிவாக்கினியினாலே தகித்து ஆக்குவது கற்பம் காட்டில் உலர்ந்துகிடக்கும் கோமயத்தை யெடுத்துச் சிவாக்கினியினாலே தகித்து ஆக்குவது அநுகற்பம். வனத்திலியல்பாகத் தீப்பற்றியதால் வெந்து நீறியபொடியைப் பஞ்சகௌவியப் விட்டுப் பிசைந்துருட்டிச் சிவாக்கினியினாற்றகித்து ஆக்குவது உபகற்பம். இவைகட்குப்பிரமாணம்.

## பேரூர்ப்புராணம்.

இயம்பு வைதிக நீறென்று விலௌகிக பூதி யென்று
பயந்தரு நீ திரண்டாம் பகர்ந்த வைதிக வெண்பூதி
யுயர்ந்திடு மோம குண்டத் தெளிர்வதா மற்றைப் பூதி
வயந் தரு புனித நல்லான் மயத்தினா னவ தாகும். (க

தீது புராதனியே யென்றுஞ் சத்தியோ சாதை யென்று
மிகவில் வைதிக வெண் பூதி யிருதிறனாத நேரே
புகழ்தரு வேத னோமகுண்டத்துப் பூப்பதொன்று
பகர் தரு மறையோ ரோம்பு மங்கியிற் படுவ தொன்றும். (உ)

இலௌகிக பூதிதானு மிருதிறனுறும் பாவ
முலைவுற வாற்றுந் தீக்கை யுற்றவர்க் குரியதாக
நிலைபெற நிறுவுஞ் சைவ மென்றுந் தீக்கையின்றி
யலைவுறு மாந்தர் தங்கட் கடுத்திடு மசைவமென்றும். (க)

வைதிக விபூதி புத்தியையும் சைவவிபூதி முத்தியை யன்றி புத்தியையுங் காதலித்தால் அளிக்குமென்பதற்குப் பிரமாணம்.

## தணிகைப்புராணம்.

உலகருக் குரிய மறைவழி வேட்டு மோங்கிய விரசையிற் பொடித்த, விலகு வெண்ணீறு வைதிகபூதி யின்னது புத்தியே யளிக்கு, மலமறு சத்திபாதிந் தவர்க் குரித்தாய் வயங்கு மாகம வழி தீக்கை, நிலவு செங்கனலிற் பொடித்த வெண்பூதி நிகரிலாச் சைவ வெண்ணீறு. (க)

முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின்
முகிழ்க்கு மாற் சைவ வான்பூதி. (உ)

இனிஅசைவ விபூதியாவது தேவாலயமடைப்பள்ளி நீறும் அடியவரமடத்து மடப்பள்ளி நீறும் வனத்திலியல்பாக வெந்தநீறுமாம்.

## பேரூர்ப்புராணம்.

மறையின் வழிச் செந்தீ வேட்டு
மறைஞர் முதலோர் மூவர்க்கு
மறை வைதிக வெண் பொடியாகு
மசைவமென் மூன் மொழிந்தபொடி
பறையு மெழி லாலயத்து மடைப்பள்ளிப்
பொடியு மடியார் மடத்
துறையு மடைப்பள்ளிப் பொடியுமுயர்
கான் வெந்த பொடியுமாம். (க)

இவற்றுள் வைதிக விபூதியினை வேதவிதிப்படி செந்தீயோம்பும் அந்தணர்முதல் மூன்றுவருணத்தாருந் தரித்தற்குரியராவர் விபூதியை உத்தூளனமாகத் தரித்து அதன்மேல் திரிபுண்டரமாகத் தரித்தல் வேண்டும்.

திருநீற்றை வைதிகரணியுந் தானங்களாவன.

## பேரூர்ப்புராணம்.

மறையோர் சிரம் வானுதல் மருமம்
வாகு விரண்டு மவற்றொடு மண்
ணிறையோர் செகில் வார் துடை நான்கு
மிவற்றோ டேனையோர் முழங்கை
செறி சீர் முன்கை முழந்தாள் வெங் செவிகண்
பதினொன்றினு நீறு
குறையா தணிவர் செகிற் றுடையுங் கூட்டி
மறையோ ரணிதலுமாம். (௩)

## காஞ்சிப்புராணம்.

கை செவி சென்னி கழுத்தி னெப்போதுங் கண்டிகை
யணிதல் வெண்ணீறு
மெய்யலாம் பூசி யைந்திடத்தும் விலங்கு
முப்புண்டரம் பொறித்தல்
வைதிகநிலையோர் மரபென மறைநூல்
வகுத்திடு மாதலி னிவற்றைக்
கைவிடா தென்றுங் கடைப்பிடித்திடுக விகழ்ந்திடிற்
கடையரே யாவார்.

வைதிகாணியுந் திரிபுண்டரத்தில் முதற் புண்டரமானது பிரணவத்தில் அகாரமும் வேதத்தில் இருக்கும். குணத்தில் இராசதமும். பொருளிற் பொரியாதிகளும். சத்தியுட் கிரியாசத்தியும். கர்த்தாவில் மகாதேவரும் அக்கினியில் காருகபத்தியமும் என்றிவற்றின் மயமாக விளங்கும்.

இரண்டாம் புண்டரமானது. பிரணவத்தில் உகாரமும் வேதத்தில் எசுரும். குணத்திற்கு சாத்துவிகமும் பொருளில் ஆன்மாவும் சத்தியுள் இச்சாசத்தியும். கர்த்தாவில் மகேசுரரும். அக்கினியில் தட்சிணாக்கினியும என்றிவற்றின் மயமாக விளங்கும்.

மூன்றாம் புண்டரமானது. பிரணவத்தில் மகரமும் வேதத்தில் சாமமும். குணத்திற் றாமதமும். பொருளிற் பரமான்மாவும். சத்தியுள் ஞானசத்தியும் தெய்வத்திற் சிவனும் அக்கினியில் ஆகவநீயமும் என்றிவற்றின் மயமாக விளங்கும்.

## பேரூர்ப்புராணம்.

தக்க வகர மிருக்கு விராசத வொண்குண மான்மா வென்னத்
தொக்க பொறி யாதிகள் கிரியாசத்தி தாக மர்மாதேவர்
பக்க வழல்சேர் காருகபத்திய மென் றிவற்றின் மயமாகு
மிக்க வெழிலார் புண்டரத்துள் விளங்கு முதற்புண்டர மாதோ.

வழங்கு முகர் மெசர் வேதம் வளர் சாத்துவிக மகமென்ன
முழங்கிவிடு மான்மா விச்சாசத்தி முடிவின் மகேசர் மிகத்
தழங்கி யெழுந்தக் கணச் செந்தி சாற்று மிவற்றின் மயமாகும்
பழங்க ணறுத்து வான்கதியிற் படுக்கு மிரண்டாம் புண்டரமே.

போற்று மகர முயர் சாமம் புக ழுமதமாங் குண மலநோய்
தீர்ற்றும் பர மான்மா நன்மை நிகழ்த்து ஞானசத்தி தகத்
தேற்றுஞ் சிவ னுகவநீயஞ் செப்பு மிவற்றின் மயமாகுந்
தேற்று மதிவாணுதற் பாவாய் விளங்கு மூன்றாம் புண்டரமே. (௧)

சைவர்கள் தர்ச்சனி கனிட்டை விரல்கள் தணந்த மற்றேனைய விரல்களால் சிரம் நுதல் மார்பு உந்தி முழந்தாள்கள் புயங்கள் முழங்கைகள் முன்கைகள் முதுகு கண்டம் செவிகள் ஆகிய இந்தத்தானங்களில் ஈசான முதலிய மந்திரங்களை ஒவ்வொருதானத்திற்கு முறையேகூறுமுக மார்க்கத்தெளிந்து விபூதி தாரணஞ் செய்துகொள்ள வேண்டும் நெற்றியில் இரண்டு கடைப்புருவ வெல்லை நீளமும் மார்பிலும் புயங்களிலும் அவ்வா றங்குல நீளமும் மற்றைத்தானங்களில் ஒவ்வோரங்குலநீளமும் தரித்தல் வேண்டும் அல்லது நெற்றியிலும் ஆறங்குல அளவினதாய்த் தரித்துக் கோடலாமென்பதும் அவ்விதந்தரித்துக்கொள்வதில் வளைதலில்லாமலும் இடையறாமலும் ஒன்றை யொன்று தீண்டாமலும் மிக அகலாமலு மிருத்தல் வேண்டுமென்பதற்குப் பிரமாணம்.

## பேரூர்ப்புராணம்.

தரிக்கும் விர றர்ச்சனி கனிட்டை தணந்த
மூன்றுமா மவற்றால்
வரிக்கு முறைகே ளனுமிகை மத்திமையால்
வாமந்தொடுத் தீர்த்துத்
தெரிக்கும் வலப்பாற்மி றுடுத் திடையேதிக
முக்குட்டத் தெதிர்த்தல்
பரிக்கும் வலத்தோட்கெதிர் முறையிற் பிரிந்து
தரித்தல் மரபாமால். (௧)

இடை மூவிரலி னெருங்குற நேரிடனு
முறையாஞ் சிர நுதன் மார்
புடைசேருந்திக் கோன முயர் தற்புருட
மகோரமது
நடைசேர் வாமம் புகன் றணிவர் நவில்
சாதத்தின் முழங்கா டோள்
படிசேர் முழங்கை முன்கை களம் பரந்த
வெரிந் வார் செவிக ளணிவார். (௨.)

அற வொன்றா டொன் றுக னியகறல்
வளாத விடையறுதல்
பிறவு மொழிய வணிநீற்றிற் பேறு மளவு
நுத லூரந் தோட்
குறு மங்குல மூவிரண்டாகு மொழிந்த
வுறுப்புக் கொன்றேயா
மிறு மெல்லிடையாய் திரிசூலத் தெழிலார்
பூதி யிடனுமாம். (௩)

திக முக்காலனஞ் செய்தன்றித் திரிபுண்டரஞ்
சாத்தா ரெவருந்
தருசத்திகள் செய்யாக் காலந்தன்னிற்
புனைந் தினிதணிவர்
மூகிழ் மென்முலையாய் சைவர் புரி முறைமை
தெரிந்தாம்.

## கடம்பவனபுராணம்.

நிக ஆரம் புய நுவன்றிடு நெடுமை நீற்றளவை
மதிகொண் மூவிரு விரற்களா மற்றவற் றொன்றுந்
துதிகொள் சென்னிக்குங் காதிற்குந் தொடுதலே போதும்
பதிகொண் மூவிரற்பட வணிகுவர் பகருறுப்பின். (௧)

வளாதலுங் குவிழ்த்தலும் வன்மையு மாசு
மளவி யொன்றொ டொன்றுறுதலும் மறப்பிரிந் திடலும்
விலைபு மூவிரு நிக்குணம் விளங்க நீறணிந்தா
லுள வுறுங் குறைபிலாதவர்க் கலக்கண் வந்துறுமால். (௨)

திருநீற்றை உத்தூளனமாகத் தரித்துக்கொள்பவ ரித்தகையரென்பது பின்வருஞ் செய்யுட்களாற் றெள்ளிதிற் புலப்படும்.

### பேரூர்ப்புராணம்.

பரவு மறையோ ருத்தூளம் படிவமுழுது நாபியின்மே
லரசர் வணிகர் பட்டம்போ லணிவர் சதுர்த்த ரெழுத்தாக
விரல்க ளொருமூன் றுற வணிவர் விபூதியணியா தறமாதி
புரவுவளர் நல்வினை யொன்றும் போற்றார் பனுவல்போற்றுவார்.

### கடம்பவனபுராணம்.

அந்தணாளர் தம் பதாந்தமே யளவு முத்தூளம்
வந்த காவலர் நாபிமேல் வணிகரா யலரு
முந்து பட்டம்போன் மூவிரற்கொண் டெழுத்தாகச்
சிந்தைசெய்து சூத்திர ரணிகுவர் விதித்திறத்தால். (௧)

விபூதிதாரணஞ் செய்யுங்காலத்தில் பூமியில் சிந்துதல் வாய்திறந்துக்கொண்டிடுதல் தலையசைத்திடுதல் தலைகவிழ்ந்திடுதல் ஒரு கையாலேற்றிடுதல் யாகத்தின் முன்னிருந்திடுதல் ஆசிரியனுக்கு முன்னிருந்திடுதல் ஆகிய இவைகள் கூடாவென்பதற்கு, பிரமாணம்

### கடம்பவனபுராணம்.

ஒரு கையிற் கவர்ந்தன துகிற்றலையின வொருவர்
தரு விலைக்கு வாங்கின வதிக்கைய ரளித்தன முன்
கருதுபூதி கக்கவிழ்ந்து மங்காந்துங் கம்பித்துந்
தெரு நெறிப்பட நடந்தும் பூசின தருந் தீங்கு. (௧)

ஆரவன் முன்னா லறைதரும் யாகத்தின் முன்னுங்
குரவன் முன்னு நீறணிவது தீதவை குறியார்
பரவுபூதியோ ரணுத்துணை பாரிடை விழ்ப்பின்
விரவு மெண்ணிலாக் கற்பக்கள் வெங் நரகுழப்பார். (௨)

### பேரூர்ப்புராணம்.

ஒருகை யேற்ற பொடி விதியி னுஞற்றுநீறு விலைப்பூதி
யருள்செய் தீக்கையிலர் போதக்தளித்த பூதி யிவையாகா
தரையின் விழுத்த லங்காத்த றலைகம்பித்தல் கவிழ்தன் முதல்
வரைசெய் பலவு மொழித்திடுவார் மதே பூதி தரித்திடுங்கால்.

## தணிகைப்புராணம்.

ஒருவிர லொருகையினிட லுத்தூளனஞ்
செயா தணித றெய்வத் திக்
குருபரன் வித்தை யெதிர்வழி வழுக்கள்
கூறிட நீசர்முன் னணித
றரைமுக நோக்கி யணிதலின் றணிதறருநர்பா
லொருகையி னேற்ற
லெரி நரகுய்க்கு மிவைவிடல் சந்தி யில்
லுழிநீரின் றிப் பூசல். (௧)

திருநீற்றை ஒவ்வொருதானங்களிலு மணிவதனாலாயபயன் பின்வருவனவற்றாற்காண்க.

## கடம்பவனபுராணம்

சிரத் தணிந்திடிற் கழுத்தள வுறுபவந் திரு
முரத்திற் பூசிடி னுள்ளத்தால் வரும்பவ மொழியுந்
தரிக்கி னுபியினி லிங்கத்தால் வரு பவந் தணியும்
பொருத்து பாரிசத்திடின் மடந்தையர்ப் புணர் பவம் போம் ()

குதத்தினுக்கு மேற் பூசிடிற் குதத்துறு பவம் போம்
விதித்த திண்புயத் திடிற் கையாற் செயும் பவம் விடுங்
கதித்திடும் முழந்தாளினி லணிந்திடிற் காலான்
மதிக்கவே வரும் பவங் கதிர்ப்பனி யென மாறும். (௨)

சிவபூசை சிவமந்திரம் சிவத்தியானம் சிவவணக்கம் சிவபுராணம் வாசித்தல் கேட்டலாகிய இவைகட்குத் திருநீறணிந்து கொண்டாலன்றி யதன்பயன் சித்தியாதென்பர்.

## கடம்பவனபுராணம்.

பூசை மந்திரந் தியானநூல் புரிதவம் வணக்கம்
பேசு நீறின்றிப் பிறங்கு மெக்கிரியையுஞ் செய்யார்
மாசி லந்தணர் மகத்தினுக் கீனத்தும் வத்துறினுந்
தேசுறும் விதித் தியின்றி முடியுமோ முடியா. (௧)

இனிச் சைவவிபூதி சிவாக்கினியினாலே ஸம்ஸ்கரிக்கப்பட்டுப் பராசத்தி வடிவாய் விளங்கும் அது பராசத்தி வடிவினதென்பது நியதிப்பயனில் "திருநீறெடுக்கும் பிராமணமேது சிறந்திடக்கை, தருநீறுசத்தி தருவிப்பதேது தனியுருவென், என்றெழுந்த வினாவுக்கு விடையாக பேசும்வடிவு பரைவடிவாம்"—எனக் கூறு மாற்றானும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த "மந்திரமாவதுநீறு" என்று தொடங்கிய திருநீற்றுப்பதிகத்தானும் இனிது விளங்கும் அஃதாவது அகத்தியமுனிவர் தாம் திரட்டியருளிய தேவாரத்திரட்டில் நீற்றுப்பதிகம். "பரையின் வரலாறு" என்றருளிச்செய்து நான்முகத்தைப் பொருளடக்கங் கூறிய அகவலிலும் "நீற்றுப்பதிக நிகழ்த்துங்காலை மாற்றுப்பரையின் வரலாறாகும்" எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். நீற்றின் வரலாறு பரையின் வரலாறாகுமெனவே நீறுபரை வடிவாயுள்ளதென்பதும் அதனால் அவ்வரலாறு பரையின் வரலாறாகுமென்பதும் இனிது போதரும் அப்பதிகத்திலே சிவனுக்குரிய மந்திர வடிவங்களாயுள்ளதும். தேவர்கள் மேல் நின்று அவர்களை யதிட்டித்து ஐந்தொழில் செய்விப்பதும் சுந்தரசொரூபமாயுள்ளதும் எல்லோராலும் தத்தம்பிரார்த்தனை நிறைவேறுமாறு துதிக்கப்படுவதும் சிவாகம சொரூபமாய் விளங்குவதும் சிவாகமத்திற் பிரதிபாதிக்கப்படுவதும். சைவசமயத்திற் பிரகாசித்துள்ளதும். பராசத்தியாகிய சிவவிபூதியேயாம் என்று தொடங்கி, அப்பரையின் பிரபாவ வரலாறெல்லாம் விரித்துரைக்கப்பட்டது "தோடுகூற்றுப் பித்தாமூன்றும் பீடுடைத்தேசிகன் பேரருளாகலின்" அங்ஙனங்குருவருள் பெற்றோர்க்கு அதனால் முன்னர் விளைவது பராசத்தி விளக்கமாகலின் அவ்வுண்மை தோன்றக்குருவருளின் பின்னர்ப் பரையின் வரலாறெனவைத்துப் போந்த அகத்தியமுனிவர் திருவுள்ளக்குறிப்பும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவுள்ளக்குறிப்பை அநுவதித்து நின்றமை கண்டு கொள்க. இவற்றின் விரிவெல்லாம் அகத்தியர் திரட்டின் திருக்குறிப்பை விரித்துரைக்கும் பிரகாணத்தில் எடுத்துக்கூறுவாம் இது நிற்க சைவசந்தியாவந்தனத்திலும் அஸ்த்திர சந்தியோபாசனமாகிய கன்மமல நீக்கக் கிரியையும் ஆசமனமாகிய மாயாமல நீக்கக்கிரியையும் முன்வைத்துச் சகளீகரணமாகிய மந்திர சிவசொரூப விளக்கக் கிரியையைப் பின்வைத்துப் பஸ்மஸ்நானக்கிரியையை இடைவைத்த நோக்கம் கன்மமாயைகள் நீங்கியபின் மலம்பரிபாகமாகி அதற்கேற்பச் சத்திநிபாதம் விளைந்து அதுகாறும் மலத்தைப் பாகப்படுத்தி நின்ற திரோதசத்தி செயலற்று நீங்க அருட்சத்தியாகிய பராசத்தி இராவிருளின் செறிவை யொழித்தெழும் ஆதித்தப்பிரகாசம்போல ஆணவ மலவிருளை நீக்கிப் பிரகாசிக்குமாகலின்

அங்கிலே தரும் பராசத்தியின் மூழ்குதலாகிய பஸ்மஸ்நானம் ஆண்டு வேண்டப்படுவதென்பது பத்தியேயாம். பராசத்தி பிரகாசித்தல் ஆன்மா முழுக்கலந்தாலன்றி ஆணவ விருள்பிறிதொன்றானும் நீங்கமாட்டாமையின் ஆணவமல நீக்கத்துக்கு விபூதி ஸ்நானம் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாம், அது.

## திருக்காளத்திப்புராணம்.

புழுகு செஞ்சாந் திவை புனைந்து புன்மல
மொழுகு மொன்பான் றுளை யுடம்பை யென்றுநீ
யழகு செய்திடின் மல மகலுமோ பரன்
முழுகு வெண் ணீறிடின் முற்றுமாயுமே. (௧)

இவ்வருட்பேற்றிற்கு அருகரல்லாதார். விபூதி ஸ்நானமின்றியுஞ் சந்தி செய்வர் அது அவர்க்கிழுக்காகாது சைவர்க்காயின். விபூதி ஸ்நானமின்றிச் சந்தியாவந்தனமே முடியமாட்டாது இனி விபூதிஸ்நானம் பராசத்தி விளக்கத்தின் பின்பே சிவவடிவம் வாய்க்குமாகலின் சகளீகரணம் அதன்பின் வைக்கப்பட்டது. இவ்வமைவானும் விபூதி பராசத்தி வடிவமென்பது புலப்படும் அதுபற்றியன்றே விபூதியினைச் சகலவேத வேதாந்தங்களும் சிவாகமங்களும் புராண ஸ்மிருதி இதிகாசங்களும், தமிழ்வேத முதலிய திருமுறைகளும் ஒருங்கே ஒத்துத் துதிப்பனவாயின. ப[illegible] ஜாபால முதலிய பல உபநிடதங்கள் இவ்விபூதியின் பெருமையை எத்துணையோ எடுத்துப் போற்றுதலுங் காணலாம் இது நிற்க. வி[illegible]யென்றால் மகதை சுரியமென்றர்த்தமாம். வி. உபசர்க்கம் மிகுதிப்பொ[illegible]ளில் நிற்கும். பூதி ஐஸ்வரியம் என்றர்த்தமாம் மனிதர் இந்திரன் முதலாயுள்ளோர். ஐஸ்வரியங்களிலும் மேலானதாய்த் தனக்கு மேற்பட ஒன்றில்லாது தானே பரமமகத்தாய் விளங்குதலின். இது மகதைஸ்வரியமென்னும் பொருள்வாய்ந்த விபூதிப்பெயருடையதாயிற்று. ஐஸ்வரியமாவது ஒருவனுடைய சுகத்துக்கேதுவாயுள்ள செல்வம் சிவம். நித்தியானந்த வஸ்துவாய் விளங்குதற் கேதுவாய் நின்ற ஐஸ்வரியங்கள். சர்வஞ்ஞத்துவாதி யறுகுணங்களை இயல்பாக உடைமையால் அவர் ஆணவமாதி பந்தங்களிற் படாது அநாதிமுத்தராய் விளங்குகின்றாராதலால் ஆணவமலத்தை யொழிக்கும் வலியுள்ளது அக்குணங்களேயாம்.

அக்குணங்கள் பொதுமையிற் பராசத்தியென வொன்றாய் நிற்குமாதலால் சிவனிடத்து மலவலி கெடுத்தற்கு ஏதுவாயுள்ள குணங்களை நாமும் பெறின் நம்முடைய மலவலியையும் அது கெடுத்தொழிக்குமாகலின்

அது கருதியே அவ்வியல்புடைய விபூதிதாரணம் நம்மனோராற் செய்யப்படுகின்றது. இது நீறு விபூதிசாரம் பசிதம் ரக்ஷையென்னும் பலபெயர்கள்பெறும். தரித்தோர் தீவினையனைத்தையும் நீற்றிவிடுதலால் நீறெனப்படும். அழிவில்லாத முத்திப் பெருஞ்செல்வத்தைத்தருதலால் விபூதியெனப்படும். அநாதிபந்தமாகிய ஆணவமல அழுக்கினைக் கழுவுதலாற் சாரமெனப்படும் அறியாமை நீங்க மேலான பிரகாசத்தைத்தருதலாற் பசிதமெனப்படும் பூதப்பிரேத பைசாசங்களாலும் பலதுஷ்ட தேவதைகளாலுமுண்டாகுந்துன்பங்கள் பழிபாவங்கள் அறியாமையென்னும் பலவற்றையுமகற்றிச் சாத்தலால் ரக்ஷையெனப்படும். இவ்வாறு இதன்குண மகிமைகள் பலவுளவென்பது பின்வருஞ் செய்யுட்களானும் நன்கு விளங்கும்.

## பேரூர்ப்புராணம்.

நீடலுறுந் தீவினை யனைத்து நீற்றிவிட்டலா னீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதி யென்று முயிர்தோறுங்
கூடு மலமாசினைக் கழுவுங் குணத்தாற் சாரமென்று மட
மோடவளர்சோதியைத்தரலாற்பசிதமென்றுமுரைப்பாரால். (க)

அலகை பூதம் வேதாள மடர்மந்திரத்தா னலைப்புறுத்தும்
பலதெய்வதங்க ளிடரச்சம் பழி பாவங்கண் மடமென்னுங்
கலதி முழுது மெளிதகற்றிக் காப்புக்கொளலாற் காப்புமா
நிலவைப்பிடத்தி னதன்பெருமை நிகழ்த்தலரிதாமடமாதே. (உ)

## கடம்பவனபுராணம்.

தொகுத்த வாழ்க்கையாற் பூதியுஞ் சோதிமேற் றரலாற்
பகுத்த நூல்புகல் பசிதமும் படுமலம் பிணி மா
சகுத்தலா லுயர்சாரமுங் காத்தலாற் காப்பு
மிகுத்த தீது நீற்றிடுதலா னீறும் பேர் விளம்பும். (க)

## வாயுசங்கிதை.

சிவாக்கினி தனக்கு விரியமாகுந் திகழும்
வெண்ணீறு வெண்ணீற்றை
புவாக்கடல் விருப்பினணிபவர் தம்மை
யுற்றிடு பேய்பல பூதந்
தவாத்திறல் கெட்டு நலிந்திடா தகலுஞ்
சடைமுடி புனைந்திடு சிவனை

யவாக்கெடத் தோற்று வித்தலா லதனைப்
பசிதமென் றறைவரா லறிந்தோர். (௧)

பன்னிடு பாவம் பற்றறப் பறியப்
பறித்தலாற் பசும மென்று ரைப்பார்
மன் னயிச்சரியம் வழங்கு தன்மையினான்
மாசறு விபூதியென் றுரைப்பார்
துன்னியே புரத்தல் செய்தலா லிரக்கை
யென்பராற் சொல்வதென் னெடுத் தீங்
கின்ன வெண்ணீற்றை யணிந்து நல்விரத
மாற்றுவோன் சிவனெனப் படுவான். (௨)

## தணிகைப்புராணம்.

நலிபெரும் பாவமு நாச மாக்கலா
னொலிகெழு பன்ம மூள்ளுடற்று பிழைகள்
சலமெனக் கழுவலிற் சாரம் வேட்டவப்
பலனுற விளங்கலிற் பசிதமென்பரால். (௧)

எக்கிரியைகள் செய்யினும் விபூதி தரித்தே செய்தல்வேண்டும். விபூதி தரியாது செய்யுங்கிரியைகள் உவர்நிலத்திலிட்ட விதைபோலப் பயன்படா சைவசமயத்தவர்களா யுள்ளவர்கள் விபூதியணியாராகில்அவர் நெற்றி சுடுகாட்டுக்குச்சமமாகும் "பூதியணியார் முகம்புறங்காடு, நீறில்லா நெற்றிபாழ்" என்னும் ஆன்றோர் வாக்குகளு மிதற்குறுசான்றாம். விபூதிதாரணத்தின் புண்ணியமில்லாமையால் விபூதி தரித்தோர் ஒன்றுஞ் செய்யாதவராயினும் எல்லாத்தவ முதலியவைகளையும் நிரம்பச்செய்தவராவர். இதனை "பூதிகொண்டோர் வாளாவிருந்திடினும், வீறுதவமாதி கணிரம்ப விளைத்தோராவர். என்னும் புராணச்செய்யுளும் வலியுறுத்தும்.

## பிரமோத்தரகாண்டம்.

எழுகோடி மந்திரமு மெண்ணி றவமு மிருநிலத்தி
லாழமுடைய கங்கைமுத லனந்த நதியு மமரேசன்
விழுத்தாரக மீனுமவ்வெள்ளி யனைத்தும் விளம்புங்காற்
செழுஞ்சடையான் றிருநீறு தரும்பே றொன்றற் காராவே. (௧)

பத்தியால் வெண்ணீ றணிந்தோர் பாரைப்
　　பொதுநீங்கப் புரந்து
துய்த்தபோகத் திறுதியினிற் சோதி
　　விமானத்தினி லேறி
மைத்தகுழலாரொடு மருவி மகவான் பதத்தில்
　　வாழ்ந்து பின்னர்ச்
சுத்த பசத்தை யொருவு சிவசாயுச்சியமே
　　சார்வாரால். (உ)

அறம் முதலிய எவ்வகைக் கருமங்களும் திருநீறணிந்து செய்தா லன்றி பயன்படா தென்பதற்கு.

## சூதசங்கிதை.

டகர் புனித நீறணியார் ஞானமடையார் கோடிபவ மாறுகும்
தகர்த ஆரூர்சமுசார மாபாவ முடையராய்த் தாழ்வார் குப்பி
புகரில் வருணச்சிரம பல்முமுமுரவரியத்தும் புனிதமான
நிகரரிய புண்ணியமும் பாதகமாமென்று மறைநிகழ்த்து மாலோ.

பல்பவப் பாவியருக்கே நீற்றில் வெறுப்புண்டாகும்
　　புண்பார் நீற்றைக்
குலவுவாரெல்லா மாபாவரெனத்
　　தெரிந்துகொள்ள வேண்டு
நலமு திம்மான்மியஞ் சொல வெம்மாலு
　　மற்றெம்முடைய குருநாதனாலு
மலர்புகழீர் முடியுமோ முடியா தெக்காலத்தும்
　　வாய்மை யிதே. (உ)

## காஞ்சிப்புராணம்.

நை செவி சென்னி கழுத்தி னெரிப்பாறுங்
　　கண்டிகை யணிதல் வெண்ணீறு
மெய்யெலாம் பூசி யைந்து மூவிடத்தும் விளங்கு
　　முப்புண்டரம் பொறித்தல்

# திருநீற்றுப் பெருமை.

வைதிக சிலேயோர் மடமென மறைநூல் வகுத்திடு
மாதவி ளிவற்றைக்
கைவிடா தென்றுங் கடைப் பிடித்திடுக விகழ்ந்திடுங்
கடையரோ யாவர். (௪)

## சிவஞானதீபம்.

நிரந்த மனவாக் குடலா லீனைக்க கன்ம நீங்குவ
தெவ்வாறெனவே வியம்ப வேண்டா
பரந்த கொலைப் பாதகன்கைக் கத்தியேனும் பரிசனவே
தியைப் பரிக்கப் பொன்னுமாபோல்
விரிந்தமரந் தமர்ந்தபல பறவை யெல்லாம் விரைந்
தொருகல் லெறிந்திட விட்டேகு மாபோ
லரன் திருநாமத்தை யுரைத் தொருகால் வெண்ணீ
றணிந்திட வெவ்வினை யனைத்து மகன்று போமே. (௫)

இன்னும் நம்மைமலமா யாகன்மங்கள் வருத்தாவண்ணம் அவை
கள வென்று முத்திபெறவேண்டின் அதற்குத்துணைசெய்ய வல்லது
விபூதிதாரணமேயாம் அதுபற்றியன்றே.

ஆனந்தாக் கவசமடையப் புகுமின்கள்வான
நாடான்மேவா நாம் மாயப்படைவாராமே.

என ஞானவெற்றி கூறினர். கவசம்.

முற்றிற்று.

28/4/19
Q23:4U
N09
118849

Ripon Press.

506